தியாகராசர் கல்லூரி : மதுரை – 09
நவம்பர் 2020 பருவத் தேர்வு விதிமுறைகள்

I. தேர்வு அட்டவணை :

| Session | Login | Exam Time | Upload | Closing Time |
|---|---|---|---|---|
| I | 8.45 a.m. | 9 a.m. – 10.30 a.m. | 10.30 a.m. – 10.50 a.m. | 11 a.m. |
| II | 11.45 a.m. | 12 Noon – 1.30 p.m. | 1.30 p.m. – 1.50 p.m. | 2 p.m. |
| III | 2.45 p.m. | 3 p.m. – 4.30 p.m. | 4.30 p.m. – 4.50 p.m. | 5 p.m. |

II. வினாத்தாள் அமைப்பு :

**QUESTION PATTERN**

| Class | Section – A | Section – B | Page Limit |
|---|---|---|---|
| II Yr. UG | 10 x 1 = 10 | 5 x 8 = 40 | 12 Maximum |
| III Yr. UG | 10 x 1 = 10 | 5 x 8 = 40 | 12 Maximum |
| II Yr. PG | 5 x 10 = 50 | -- | 15 Maximum |

III. கேமரா இணைப்புடன் இருக்கக்கூடிய மடிக்கணினி / மேசைக் கணினி / அலைப்பேசி இவற்றின் மூலம் தேர்வு எழுதலாம். முழுமையான தேர்வு நடைமுறைகள் கண்காணிக்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

IV. இரண்டு மணி நேரத்திற்க தொடர்ச்சியான இணையசேவை (internet) இருக்குமாறு உறுதி செய்து கொள்ளவும்.

V. தேர்வு எழுதும்பொழுது வெளிச்சமான இடத்தில் அமர்ந்து கேமரா முன்பு தெரியும்படியும், கல்லூரி அடையாள அட்டை அணிந்தும், எந்தவித இரைச்சல் இல்லாமலும் மற்றும் பாடப்புத்தகங்கள் அருகில் இல்லாமல் இருக்க வேண்டும்.

VI. மாதிரித் தேர்வில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டும். 15.12.2020 அன்று உங்களுடைய மின்னஞ்சலுக்கு "2020 மாதிரித் தேர்வு" (2020 Mock Test) என்ற இணைப்பில் உங்களுக்கு விருப்பமுள்ள நேரத்தில் கலந்து கொள்ளலாம்.

VII. பருவத் தேர்வில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் :

**Step 1** : தேர்வு தொடக்கத்திலிருந்து முடியும் வரை காணொலி மூலம் கூகுள் மீட்டில் இணைந்திருக்க வேண்டும்.

**Step 2** : வினாத்தாளை கல்லூரியின் மின்னஞ்சல் அல்லது கல்லூரி வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**Step 3** : தேர்வு முடிந்த பின்பு விடைத்தாள்களை PDF ஆக மாற்றி 10 MB அளவில் சுருக்கம் செய்து உங்கள் மின்னஞ்சலில் வந்த இணைப்பிலோ அல்லது கல்லூரி வளைதளத்தில் உள்ள இணைப்பிலோ பதிவேற்றம் செய்ய வேண்டும்.

VIII. A4 தாளில் கருப்பு மையில் விடைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும். விடைத்தாளின் இரண்டு பக்கங்களிலும் கீழ்வரும் விவரங்கள் இடம் பெற வேண்டும்.

இடது புற மேல்பக்கத்தில் : மொத்தம் எழுதிய பக்கங்கள்
வலது புற மேல்பக்கத்தில் : பெயர், தேர்வு எண், தேதி, பாடக்குறியீடு எண், பாடத்தலைப்பு (முதல் பக்கத்தில்)
இடது புற கீழ்ப்பக்கத்தில் : மாணவரின் கையொப்பம் (அனைத்துப் பக்கங்களிலும்)
வலது புற கீழ்ப்பக்கத்தில் : பக்க எண் (அனைத்துப் பக்கங்களிலும்)

IX. தேர்வின் பொழுது விடைத்தாள்களை புகைப்படம் எடுப்பது, காணொலியில் பதிவு செய்வது அல்லது உங்கள் செயல்பாடுகள் சந்தேகப்படும் படியாக இருந்தால் தேர்வு விதிமுறைகளை மீறியதாகக் கருதப்படும்.

X. ஏதேனும் சந்தேகம் இருந்தால் கூகுள் மீட் வழியாக 0452-2310221 / 8870141639 /grievance_exam@tcarts.In இவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

XI. ஏதேனும் உண்மையான காரணங்கள் இருந்தால் துறைத்தலைவர் மற்றும் பொறுப்பாசிரியர் ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் கல்லூரி வளாகத்திற்குள் இணையவழியாக / நேரிடையாக (ஆஃப்லைன்) மூலம் தேர்வு எழுதிக் கொள்ளலாம். அவ்வாறு இருப்பின் உடனடியாக துறைத்தலைவரை தொடர்பு கொள்ளவும்.

தேர்வுத்துறை அதிகாரி